Tamil

# COVID-19 (கொரோனா வைரஸ்)

# யாரை அழைக்க வேண்டும்



## கேள்விகள் மற்றும் ஆதரவு

- சுகாதாரம் பற்றிய கேள்விகளுக்கோ அல்லது அறிகுறிகளை அடையாளம் காணவோ **1800 020 080** (24/7) என்ற எண்ணுக்கு அழைக்கவும்.
- சுகாதாரம் தொடர்பில்லாத கேள்விகளுக்கு **13 77 88** (24/7) என்ற எண்ணுக்கு அழைக்கவும்.
- மனநல ஆதரவுக்கு **1800 512 348** (24/7) என்ற எண்ணுக்கு அழைக்கவும்.
- அறிகுறிகளை அடையாளம் காண **www.healthdirect.gov.au** என்ற இணையதளத்துக்குச் செல்லவும்.
- COVID-19 தொடர்புடைய மற்ற அனைத்துத் தகவல்களுக்கும் **www.nsw.gov.au/covid-19** என்ற இணையதளத்துக்குச் செல்லவும்.

## மூன்று பூஜ்யம்

ஓய்விலிருக்கும்போது மூச்சு விடுவதில் சிரமம் இருப்பது அல்லது மூச்சுத் திணறல் ஏற்படுவது போன்ற அவசரகால அழைப்புக்காக **மூன்று பூஜ்யத்தை (000) சேமித்து வைத்துக் கொள்ளவும்.**

## மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை

உங்கள் மொழியில் இலவச உதவிக்கு **13 14 50** என்ற எண்ணுக்கு அழைக்கவும்.

## உங்களுக்கு அறிகுறிகள் இருந்தால்




- **உடனடியாகப் பரிசோதனை செய்து கொள்ளவும். அத்துடன், எதிர்மறையான முடிவை நீங்கள் பெறும்வரை சுயமாகத் தனிமைப்படுத்திக் கொள்ளவும்.** உங்கள் பொது மருத்துவரை அழைக்கவும் அல்லது பின்வரும் பொது COVID-19 மருத்துவ நிலையத்துக்குச் செல்லவும்: **www.nsw.gov.au/covid-19**
- உங்கள் சொந்த காரில் அல்லது குடும்ப உறுப்பினராலோ அல்லது ஏற்கனவே நெருங்கிய தொடர்பில் இருக்கும் ஒருவராலோ ஓட்டப்படும் ஒரு தனியார் காரில் பயணம் செய்யவும். **பொதுப் போக்குவரத்து, வாடகைக் கார் அல்லது மற்றவர்களுடன் பகிர்ந்து பயணம் செய்யும் சேவை போன்றவற்றில் பயணம் செய்ய வேண்டாம்.**
- **அறுவைச் சிகிச்சைக்கான முகக் கவசத்தை அணியவும்.** அது கிடைக்கவில்லை என்றால், நீங்கள் வந்திறங்கியவுடன் உடனடியாக ஒன்று வேண்டுமெனக் கேட்கவும்.

**உங்களையும், மற்றவர்களையும் பாதுகாக்கவும்.**



நல்ல சுகாதாரத்தைக் கடைப்பிடிக்கவும்




சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்கவும்



பரிசோதனை செய்து கொள்ளவும்

NSW GOVERNMENT

© NSW Health January 2021. SHPN (HP NSW) 200240.